உறுப்பினர் தங்கையன் மரணடைந்தார். திரு அய்யாறு அவர்கள் கொடுத்த புகார்மீது, காவல் துறையினர், வீரய்யன் மகன் சக்திவேல் மற்றும் 50 பேர்மீது கொடவாசல் காவல் நிலைய குற்ற எண். 444/94–ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 147, 148, 323, 324, 336, 427 மற்றும் 302 ஆகிய பிரிவுகளின் கீழ், வழக்கு பதிவு செய்துள்ளனர்.

திரு. சக்திவேல் தாக்கப்பட்டது தொடர்பாக, கொடுக்கப்பட்ட புகார்மீது, அதே காவல் நிலைய குற்ற எண். 445/94--ல் இந்தியத் தண்டனைச் சட்டம், 147, 148, 323, 324 336, மற்றும் 427 ஆகிய பிரிவுகளின் கீழ் காத்தான் மகன் காசிநாதன் மற்றும் 50 பேர்மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

தங்கையன் மரணம் தொடர்பான வழக்கில் சக்திவேல், கார்த்திகேயன், முத்துச்செல்வன் மற்றும் 8 நபர்கள் இதுவரை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்கள் காவல் துறையினரால் தேடப்பட்டு வருகிறார்கள்.

இந்த வழக்கில் காவல்துறையினர், சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளார்கள். கட்சி பாகுபடின்றி, தவறு யார்மீது இருந்தாலும், அவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, காவல் துறையினர், இதில் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

3. கவன ஈர்ப்பு

வேலூர் சத்துவாச்சாரியை ஒட்டியுள்ள சமூக நலக்

காடுகள் ஆக்கிரமிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

1994 நவம்பர் 8]

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

வேலூர் சத்துவாச்சாரியை ஒட்டியுள்ள சமூகநலக் காடுகள் ஆக்கிரமிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் சத்துவாச்சாரியை ஒட்டியுள்ள சமூக நலக் காடுகள் உள்ள இடத்தை பலர் ஆக்கிரமித்துள்ளதால் காடு அழியும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

கவன ஈர்ப்பு தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள காடுகள் என்பது வேலூர் கோட்டை காப்புக் காடுகள் மற்றும் அதற்கு கீழேயுள்ள மலைப் பகுதியில் எழுப்பப்பட்ட சமூக நலக்காடுகள் திட்டத்தின் கீழ் மலைத் தோட்டங்களையும் குறிக்கிறது. மேல் பகுதியிலுள்ள காப்புக் காடுகள் (வேலூர் கோட்டை மலை காப்புக் காடுகள்) சுமார் 450 ஹெக்டேர் பரப்பளவாகும். இக்காப்புக் காட்டில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் கிடையாது. இக்காப்புக் காட்டில் மேய்ச்சல் தரையாகவும் மற்றும் பரம்பை போன்ற முள் மரங்கள் கொண்ட பகுதியாகவும் இருந்து வருகிறது. இதற்கு அடுத்தாற்போல் கீழேயுள்ள பகுதி வருவாய்த் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாகும். இப்புறம் போக்கு நிலத்தின் பரப்புளவு 87.22 ஹெக்டேர் ஆகும். இந்த புறம்போக்கு நிலப்பரப்பு முழுவதிலும் சிடா (SIDA) உதவியுடன் செயல்படுத்தப்படும் சமூக நலக் காடுகள் திட்டத்தின் கீழ் 1981--ம் ஆண்டில் 45 ஹெக்டேர் பரப்பளவிலும் எஞ்சியுள்ள பகுதியில் 1993--ல் கொடைவேலன், பரம்பை போன்ற மரங்கள் நடப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட திட்ட பகுதிகள் மலை அடிவாரத்தில் சாதாரண மேடு பள்ளம் உள்ள இடத்தில் நீள வரிசையாக உள்ளூர் நிலமில்லா மற்றும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் குடிசைகள் கட்டி கடந்த ஏழு ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மொத்தம் சுமார் 112 குடியிருப்புகள் ஆக்கிரமிப்பு பகுதியில் உள்ளன. இது தவிர பஞ்சாயத்தாரால் பம்பு செட் மற்றும்

[திரு. கு. லாரன்ஸ்] [1994 நவம்பர் 8

சலவைத் தொழிலாளர்களுக்குத் துவைக்கும் மேடை ஒன்றும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறை புறம்போக்கு நிலத்தில் மொத்தம் 4.65 ஏக்கர் அல்லது 1.8 ஹெக்டேர் பரப்பளவு ஆக்கிரமிப்பில் இருக்கின்றது. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட ஆட்சியர் மூலமாகக் கோட்ட அலுவலர் நடவடிக்கை எடுத்துள்ளார். ஆனால் சட்டம் ஒழுங்கு காரணமாகவும், புறம்போக்கு நிலமாக இருப்பதாலும் மேற்படி ஆக்கிரமிப்புகளை எளிதில் அகற்ற இயவில்லை.

காப்புக் காடுகளில் எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லை. இந்த ஆக்கிரமிப்புகளால் காப்புக்காடுகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவுமில்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். விவர அறிக்கையில் சில முரண்பட்ட கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ரிசர்வ் பாரஸ்ட் என்பது 450 எக்டேர் பரப்பளவில் அமைக்கப்பட்டிருக்கிறது. சமூகநலக் காடுகள் 87.22 எக்டேர் ஆகும். இந்த ரிசர்வ் பாரஸ்ட்டிலும், அதேபோல் சமூகநலக் காடுகளிலும் மரங்கள் இருப்பதாக விவர அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அதிலே பரம்பை மரங்கள், கொடைவேலன் மரங்கள் எல்லாம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது மரங்கள் அந்த இடத்திலே இல்லை. பாறைதான் இருக்கிறது. காடு என்ற பெயரே போய், அது ஏதோ மலை போல்தான் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. பாறாங்கல்லாக இருந்து கொண்டிருக்கிறது. பணத்தை செலவு செய்து சிடா மூலம் நாம் கொண்டு வந்திருக்கிற மரங்கள் எல்லாம் இப்போது அகற்றப்பட்டு அங்கே ஆக்கிரமிப்புகள் செய்து பல பேர் கிட்டத்தட்ட 20 ஏக்கர் பரப்பளவுக்கு--ஏற்கெனவே அங்கே குடிசை போட்டு வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுக்கு ஏற்கெனவே ஏழை எளிய மக்கள் என்கிற காரணத்தால் அவர்களுக்கு நாம் பட்டா கொடுப்பதற்கு முயற்சி எடுத்து 115 பேருக்கு பட்டா கொடுத்திருக்கிறோம். மீண்டும் 112 பேர் அங்கே ஆக்கிரமித்து 7 ஆண்டுகளாக குடியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குக் கூட பட்டாவைக் கொடுத்து விடலாம். ஆனால்-சில பேர் வசதி படைத்தவர்கள், வீடு இருப்பவர்கள் எல்லாம் ஓடி, ஓடி அங்கே இருக்கக்கூடிய நிலத்தைப் பிடித்து . . . *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், விதி 55-ல் கேள்விதான் கேட்கவேண்டும். நீங்கள் விரிவாகப் பேசிக்

கொண்டிருக்கிறீர்கள். கேள்வியாகக் கேளுங்கள். இதில் கேள்வி ஒன்றும் இல்லையா?

திரு. சி. ஞானசேகரன்: கேள்வி தான். வசதி படைத்தவர்களே அந்த இடத்தில், இடத்தைப் பிடித்து கல் நட்டு அவர்கள் அதை தங்களுடைய இடம் என்று சொல்லி, 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என்று சொல்லி விற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை சமூகநலத் துறைக்குக் கொடுத்து விட்டதால் வருவாய்த்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. அதேபோல் சமூகநலக் காட்டுக்குரியவர்கள் வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடம் என்று அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து யார், யார் எல்லாம் இடம் பிடித்து கல் நட்டு விற்பனை செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களை அகற்றி காட்டைக் காப்பாற்றுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காப்புக் காடுகள் பகுதி 450 எக்டேர் பரப்பளவு ஆகும். இந்த காப்புக் காட்டில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் இல்லை. இந்தப் பகுதியில் பரம்பை, முள் போன்ற மரங்கள் இருக்கின்றன. இதற்கு கீழ்ப் பகுதியில் உள்ள புறம்போக்கு நிலத்தின் பரப்பளவு 87.22 எக்டேர் ஆகும். இது தீர்வை ஏற்படாத தரிசு நிலம். வேஸ்டு டிரை லேண்டு. இதில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. இந்த நிலம் ரிசர்வ் பாரஸ்டு ஏரியா இல்லை. இது வனத் துறைக்குச் சம்பந்தப்பட்ட ஏரியா இல்லை. இது புறம்போக்கு நிலம். ரெவின்யு நிலம். இந்தப் பகுதியில் ஆக்கிரமித்து இருப்பவர்கள் நிலம் இல்லாத மற்றும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர். ஏழை, எளிய மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக இருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இப்போது நிலமற்ற ஏழைகளுக்கு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆங்காங்கு இருக்கிற பகுதியில் வாழ்கிற மக்களுக்கு நிலப் பட்டா போட்டுக் கொடுப்பதற்கு இன்றைக்கு ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். எனவே, இவர்கள் மூலமாக வனத் துறைக்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை. எனவே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் மீது ஒரு போர் தொடுப்பதற்கு, அவர்களை அப்புறப்படுத்துவதற்கு இந்த அமைப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து பயன்படுத்த வேண்டாம் என்றும், அவர்கள் மீது ஒரு நல்ல எண்ணத்தைக் கொண்டு ஒரு காம்ப்ரமைஸ் செய்து சமாதானமாகச் செல்லுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களை வேண்டுகிறேன்.

[*1994* நவம்பர் *8*

முற்பகல் *11-30*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்திருக்கிற பதில் உண்மையானதல்ல என்று நான் சொல்ல விரும்புகிறேன். காரணம் 115 பேர்களுக்கு நானே முன்னின்று பட்டா வாங்கிக் கொடுத்திருக்கிறேன். இன்னும் சில பேருக்கு பட்டா வழங்கப்பட வேண்டும். ஏற்கெனவே 7 ஆண்டுகளாக இருப்பவர்களுக்கு பட்டாவைக் கொடுத்து விடலாம். இருக்கக் கூடிய நிலத்தை, சமூக நலக் காட்டுக்கு என்று ரெவின்யூ துறை ஏற்கெனவே கொடுத்து விட்டிருக்கிறது. அங்கே 'சிடா' மூலம் நீங்கள் மரங்களை வைத்தீர்கள். இப்போது மரமே கிடையாது. ஆகவே 'சிடா' மூலம் நிதியுதவி பெற்று அந்த இடத்திலே நீங்கள் மரங்களை வைத்து, இப்போது மரமே இல்லாமல் பொட்டல் தரையாக இருந்து கொண்டிருக்கிறது. அதில் இப்போது சிலபேர் கல்நட்டு இடம் பிடிக்கிற காரணத்தால்தான் கூறுகிறேன். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அந்தச் சமூக நலக் காடுகளைக் காப்பாற்ற வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ நான் அவர்களோடு போர் தொடுக்கிறேன் என்று எண்ண வேண்டாம். ஏழையெளிய மக்களுக்கு உங்களைவிட நானும் நிச்சயமாக முன்னின்று உதவுவதற்கு தயாராக இருக்கிறேன். அவர்களுக்கு நீங்கள் பட்டா கொடுங்கள், கொடுங்கள் என்று கூறுகிறேன். சிலபேர் அங்கே இடத்தைப் பிடித்து, கல் நட்டு, அந்த இடத்தை விற்பனை...(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் மாண்புமிகு அமைச்சர்கள் இடங்களுக்குச் சென்று, தங்கள் இஷ்டத்திற்கு நின்று கொண்டு, பேசிக்கொண்டு இருக்கக் கூடாது.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிசர்வ் ஃபாரஸ்ட்-லே கூட இப்போது மலை உச்சியிலே பாதி வரை சிலபேர் போய் குடிசை போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு, கீழே இருக்கக்கூடிய பகுதியிலேகூட நாம் இடத்தைக் கொடுத்து, வீடு கட்டிக் கொடுக்கலாம். ஆகவே, மலையின் நடுவே உச்சியிலே போய் குடிசை போட்டுக் கொண்டு இருப்பவர்களையும் சமூக நலக் காடுகளுக்குள்ளே புகுந்து இப்போது கல்நட்டு இடம் பிடிப்பவர்களையும் தடுப்பதோடு, உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பகுதியை—மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள்,—உங்களுடைய டிபார்ட்மெண்ட் ஆட்களை வைத்துக்கொண்டு நீங்கள் நடவடிக்கை எடுத்து காட்டை காப்பாற்றுவீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

1994 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார். நான், ஏற்கெனவே காப்புக் காடுகள் பகுதியிலே ஆக்கிரமிப்பு இல்லை என்பதை எழுத்து மூலமாகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்து இருக்கிறேன். காப்புக் காடுகள் சுமார் 450 ஹெக்டேர், புறம்போக்கு 87.22 ஹெக்டேர். இதில் அவர்களுடைய ஆக்கிரமிப்பு என்பது புறம்போக்கு பகுதியில் 1.8 ஹெக்டேர். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் பொட்டல் காடு என்கிறார்கள். மரம் இல்லை என்கிறார். மரம் இல்லாத அந்தப் பகுதியில் மரம் வளராததற்குக் காரணமே, அந்தப் பகுதியினுடைய மண் தன்மை மோசமாக இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இதுவே தீர்வை ஏற்படாத தரிசு நிலம். இதற்குத் தீர்வையே இல்லை. எனவே, அதை ட்ரை லேண்டாகவே ரெவின்யூ துறை தீர்மானித்து இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து பல்வேறு நிலைகளில், பல்வேறு ஃபோரங்களில் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் போன்ற பல இடங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முயற்சி செய்து இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குடியிருக்கிற காரணத்தாலே அங்கே இருக்கிற ஏழைகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொன்னால் இந்த அரசு அந்த நடவடிக்கையை எடுக்காது என்பதை உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. சி. ஞானசேகரன் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூன்றாவது கிளாரிஃபிகேஷன் எல்லாம் இல்லை. உட்காருங்கள்.*

4. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.*

திரு. இராம. இராமநாதன்: *மாண்புமிகு பேரவையினுடைய சிறப்புமிக்க தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொற்கால ஆட்சி*